
# 1 பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம்

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம் - இந்தப்
பூலோக மெல்லாம் கொண்டாட்டம்.
ஆனைமீது ஊர்வலமாம்
அற்புதமான சாப்பாடாம்.
ஒட்டகச் சிவிங்கி நாட்டியமாம்
உர் உர் குரங்கு பின்பாட்டாம்.
தடபுடலான ஏற்பாடாம்
தாலி கட்டும் வேளையிலே.
மாப்பிள்ளைப் பூனையைக் காணோமாம்
வந்தவ ரெல்லாம் தேடினாராம்.
பெண்ணைப் பார்த்ததும் மாப்பிள்ளை
பிடிக்காமல்தான் போய்விட்டார்.
எங்கே ஓடிப் போனாரோ
என்றே பலரும் பேசினாராம்.
பெண்ணின் தாயார் இதுகேட்டுப்
பெரிதும் வருத்தம் கொண்டாராம்.




இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

ஐயோ தலைவிதி என்றெண்ணி
அங்கும் இங்கும் நடந்தாளாம்.
வந்தவர் சாப்பிடப் பானையிலே
வாங்கிவைத்த பாலையெல்லாம

சந்தடியின்றி மாப்பிள்ளை
சமையல் கட்டில் தீர்த்தாராம்.
திருடித் திருடிப் பாலையெல்லாம்
தீர்த்துக் கட்டும் மாப்பிள்ளையைப்

பார்த்து விட்டாள் பெண்தாயார்
பலத்த சத்தம் போட்டாளாம்.
உடனே அங்கே எல்லோரும்
ஒன்றாய்க் கூடி வந்தனராம்.



மாப்பிள்ளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்.
மாப்பிள்ளைப் பூனை வழியின்றி
மத்தியில் நின்று விழித்தாராம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| **பூலோகம்** | - உலகம் | **ஊர்வலம்** | - வீதி உலா |
| **அற்புதம்** | - அதிசயம் | **தடபுடல்** | - ஆரவாரம் |
| **மாப்பிள்ளை** | - மணமகன் | **வருத்தம்** | - கவலை |
| **சமையல்கட்டு** | - சமையலறை | **சந்தடியின்றி** | - சத்தமின்றி |

### செயற்பாடு - I

1 பாடலை உணர்ச்சிபூர்வமாகவும் தெளிவாகவும் உரத்து வாசிக்குக.

2 ஆசிரியரின் உதவியுடன் இப்பாடலை இசையுடன் சேர்ந்து பாடுக.

3 தனித்தும் குழுவாகவும் இசையுடன் பாடுக.

### செயற்பாடு - II

**பின்வரும் கேள்விகளுக்கு முழுமையான விடை தருக.**

1. யாருக்கும் யாருக்கும் கலியாண ஏற்பாடு நடந்தது?
2. ஊர்வலம் எதன் மீது நடந்தது?
3. நாட்டியம் ஆடியவர் யார்?
4. மாப்பிள்ளைப் பூனை எப்போது காணாமல் போனார்?
5. மாப்பிள்ளைப் பூனை எதனைச் சாப்பிட்டது?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## அறுவகைப் பெயர்

தமிழில் பெயர்ச் சொற்களை ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம் அவையாவன:- නාම පද කොටස් 06 කට බෙදේ.

**பொருள்** - பொருளை உணர்த்தும் பெயர்.

**இடம்** - இடத்தை உணர்த்தும் பெயர்.

**காலம்** - காலத்தை உணர்த்தும் பெயர்.

**சினை** - உறுப்பை / பகுதியை உணர்த்தும் பெயர்.

**குணம்** - குணத்தை / நிறத்தை / வடிவத்தை உணர்த்தும் பெயர்.

**தொழில்** - தொழிலை உணர்த்தும் பெயர்.

**பின்வரும் அட்டவணையை அவதானியுங்கள்.**

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| தேன் | அறைகள் | தினம் | சிறகுகள் | சுறுசுறுப்பு | பறத்தல் |
| வண்டு | உலகம் | காலை | இலை | சோம்பல் | கறத்தல் |
| தேன்வதை | கடற்கரை | மார்கழி | வேர் | சோர்வு | உறிஞ்சுதல் |
| கணினி | பாடசாலை | கோடை | விரல் | சூடு | உமிழ்தல் |
| வானொலி | வெலிமடை | வசந்தம் | தலை | வட்டம் | உண்ணுதல் |
| சகீனா | இந்தியா | புதன் | கால் | கருணை | படித்தல் |
| சரத் | விகாரை | நாள் | முடி | அன்பு | சிரித்தல் |
| சாந்தி | கொழும்பு | பகல் | கிளை | சிவப்பு | பார்த்தல் |



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - III

**பின்வரும் பெயர்ச் சொற்களை பொருத்தமான கூட்டில் எழுதுவோம்**

| | | |
|---|---|---|
| தொலைபேசி | வகுப்பறை | நிசாந்தி |
| வியாழன் | உழைத்தல் | யாழ்ப்பாணம் |
| சொல்லுதல் | அலுவலகம் | சொண்டு |
| அமைதி | மாதம் | வருடம் |
| மேசை | கறுப்பு | கடித்தல் |
| முகம் | பாதம் | கெடுதி |

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

## செயற்பாடு - IV

பின்வரும் வாக்கியங்களில் சிவப்பு நிறத்தில் தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்கள் எவ்வகைப் பெயர்ச் சொற்கள் என அருகில் உள்ள கட்டத்தில் எழுதுவோம். රතු පාටින් දී ඇති නාම පද කුමන නාම පද වර්ගයට අයිති ද කියා කොටුවේ ලියමු.

1. கவிதாவின் **கைக்கடிகாரம்** கீழே விழுந்தது.

2. இலங்கையில் ஒன்பது **மாகாணங்கள்** உள்ளன.

3. **நேற்று** இடிமின்னலுடன் மழை பெய்தது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

4. **சிவப்பு** நிறப் பேனை ஒன்று தாருங்கள்.

5. காற்று வீசும் பொழுது மரத்தின் **கிளைகள்** ஆடின.

6. பிறருக்கு **உதவுதல்** நல்ல பழக்கமாகும்.

7. ஓடி ஓடி உழைத்தால் **உடம்பு** உறுதி கொள்ளும்.

## இலக்கணம்

### புணர்ச்சி

தமிழ் மொழியிலே நாம் சொற்களை பிரித்தும் சேர்த்தும் எழுதலாம்.

உதாரணம் : 1

| | | | | |
|---|---|---|---|---|
| மணல் | + | மேடு | - | மணல்மேடு |
| தேன் | + | வதை | - | தேன்வதை |
| கை | + | விரல் | - | கைவிரல் |

உதாரணம் : 2

| | | | | |
|---|---|---|---|---|
| கோழி | + | கால் | - | கோழிக்கால் |
| கத்தரி | + | காய் | - | கத்தரிக்காய் |
| வெண்டி | + | செடி | - | வெண்டிச்செடி |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

உதாரணம் : 3

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | வேர் | - | மரவேர் |
| குணம் | + | நலன் | - | குணநலன் |
| காலம் | + | நேரம் | - | காலநேரம் |

உதாரணம் : 4

| | | | | |
|---|---|---|---|---|
| கடல் | + | கரை | - | கடற்கரை |
| பல் | + | பசை | - | பற்பசை |
| பால் | + | சோறு | - | பாற்சோறு |

## செயற்பாடு - V

**பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுவோம்.**
**පහත සඳහන් වචන එකතු කර ලියමු.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மணி | + | முடி | = | ............................... |
| 2. | தேசிய | + | கொடி | = | ............................... |
| 3. | கால் | + | சட்டை | = | ............................... |
| 4. | கிணறு | + | தவளை | = | ............................... |
| 5. | வயிறு | + | வலி | = | ............................... |
| 6. | இலங்கை | + | தீவு | = | ............................... |
| 7. | குளம் | + | கரை | = | ............................... |
| 8. | தாமரை | + | பூ | = | ............................... |
| 9. | தமிழ் | + | பாட்டு | = | ............................... |
| 10. | வங்கி | + | கடன் | = | ............................... |

## செயற்பாடு - VI

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுவோம்.**
**පහත ඇති වචන බෙදා ලියමු.**

1. கூடைப்பந்து - ...............................
2. பாக்குவெட்டி - ...............................
3. சூரியோதயம் - ...............................
4. மலர்க்கொடி - ...............................
5. மீன்கொத்தி - ...............................
6. வாழைப்பழம் - ...............................
7. வண்ணத்துப்பூச்சி - ...............................
8. தீப்பெட்டி - ...............................
9. பூசணிக்காய் - ...............................
10. மூக்குக்கண்ணாடி - ...............................


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக